| Roll No. | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ] [ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 01. 04. 2013 ] [ Date : 01. 04. 2013

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | | | |
| 2. ✓ | | ✓ | ✓ | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. அலகிலா விளையாட்டுடையவர்

   (A) கம்பர்

   (B) அஞ்சுபாபி

   (C) இறைவன்

   (D) இராமகவி.

   *விடை :* __________

2. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

   (A) சூளாமணி

   (B) இனியவை நாற்பது

   (C) மணிமேகலை

   (D) மனோன்மணீயம்.

   *விடை :* __________

3. குழவி எவ்வாறு வாழ்தல் இனிது ?

   (A) பிணி

   (B) குற்றம்

   (C) வருத்தம்

   (D) வறுமை.

   *விடை :* __________

4. ஆருயிர் முதல்வன் யார் ?

(A) இந்திரன்

(B) ஆபுத்திரன்

(C) அறவண அடி

(D) சாவக மன்னன்.

*விடை :* ______________________

5. பேதை - எதிர்ச்சொல் தருக

(A) அறிவிலி

(B) அறிவாளி

(C) மடமை

(D) பெண்.

*விடை :* ______________________

6. வாழும் மக்களுக்குப் பொதுவானவை

(A) பாலும் பழமும்

(B) நாடும் வீடும்

(C) மழையும் பயிர்விளையும்

(D) சீரும் சிறப்பும்.

*விடை :* ______________________

7. 'ஆனந்தரங்கக் கோவை' என்ற நூலை எழுதியவர்

(A) சீனிவாச கவி

(B) இராம கவி

(C) சவ்வாதுப் புலவர்

(D) சதாசிவ தேசிகர்.

*விடை :* ______________________

8. ‘அதற்கு இங்கு சௌகரியப்படாது’ - என்றவர்

(A) அந்தணர்

(B) மகாவித்வான்

(C) மனைவி

(D) மாணவர்.

*விடை :* ____________________

9. உலகியல் வாழ்விற்கு ................... வேண்டும்.

(A) இன்பம்

(B) கல்வி

(C) பொருள்

(D) வீரம்.

*விடை :* ____________________

10. பிளிகிரிரங்கன் மலையில் வாழும் பழங்குடிகள் ஆடும் ஆட்டம்

(A) உம்ம தாட்ட

(B) சோலிகர குனித

(C) டொல்லு குனித

(D) பாகவத மேள.

*விடை :* ____________________

11. திம்மக்கா நட்டது

(A) அரசமரம்

(B) ஆலமரம்

(C) வேப்பமரம்

(D) பனைமரம்.

*விடை :* ____________________

12. இரட்டைக்கிளவிக்கு எடுத்துக்காட்டு

(A) நட நட

(B) எழு எழு

(C) மொடு மொடு

(D) கொடு கொடு.

*விடை :* ______________________

13. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு

(A) பொங்கல்

(B) வந்தான்

(C) சென்றான்

(D) வந்தவன்.

*விடை :* ______________________

14. மூன்று சீர்களால் அமைந்த அடி

(A) குறளடி

(B) அளவடி

(C) சிந்தடி

(D) நெடிலடி.

*விடை :* ______________________

15. ஒற்றளபெடைக்கு எடுத்துக்காட்டு

(A) தொழாஅர்

(B) தூஉம்

(C) கலங்ங்கு

(D) நசைஇ.

*விடை :* ______________________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. காயக்கண்டது காய்குலை .................... .

17. தருமத்தின் வாழ்வுதனை .................... கவ்வும்.

18. 'அவரை அவராகவே வாழவிடுவோம்' என்றவர் .................... .

19. தொழிலை மட்டும் குறிக்கும் பெயர் .................... .

20. இருளோ திணிந்தது. சுடரோ .................... .

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | இயேசு காவியம் | i) | வலித்தல் விகாரம் |
| (b) | எட்டுத்தொகை | ii) | டால்ஸ்டாய் |
| (c) | குரக்கினம் | iii) | கண்ணதாசன் |
| (d) | மினி இந்தியா | iv) | செர்டகாப் |
| (e) | ரஷ்ய இலக்கியவாதி | v) | ஹூஸ்டன் |
| | | vi) | புறநானூறு. |

*விடைகள் :*

a) ______________________

b) ______________________

c) ______________________

d) ______________________

e) ______________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : $10 \times 1 = 10$

22. ஐம்பூதங்கள் யாவை ?

23. செல்ல மழை பெய்ததும் பெண்கள் என்ன செய்தனர் ?

24. ஆனந்தரங்கப் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு அக்காலத்தில் நடந்த எவற்றைக் காட்சிப்படுத்துகிறது ?

25. சின்னப்பிள்ளை ஊரில் உள்ள ஆதிக்க வெறியர்களின் வெறுப்பினையும், பகையினையும் சம்பாதிக்கக் காரணம் என்ன ?

26. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம் யாது ?

27. அரசனாக வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும் என்கிறார் தேசிக விநாயகம் பிள்ளை ?

28. சுந்தர முனிவர் சுருங்கை வழி தோண்டக் காரணம் என்ன ?

29. அணி என்றால் என்ன ?

30. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

31. சொற்பொருள் பின்வருநிலை அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. ஒரு நாட்டின் உறுப்பாக அமைவன எவை ?

33. நாய்பெற்ற தெங்கம்பழமாவது எது ?

34. சேரனின் யானை தன் துதிக்கையை எதன் மேல் நீட்டியது ? ஏன் ?

35. இளைஞனின் வலிமையை கவிஞர் சிற்பி எவ்வாறு உரைக்கிறார் ?

36. அந்தணர் தன் மனைவியை அழைத்து மகிழ்ந்து கூறியது யாது ?

37. விடுதி மேலாளர் சாந்தா பார்பராவிலேயே நிலையாகத் தங்கக் காரணம் யாது ?

38. தீயவழியில் வரும் செல்வம் தீயவழியில் செல்வது திண்ணம் - எவ்வாறு ?

39. முத்தநாதன் எவ்வாறு அரண்மனைக்குள் நுழைந்தான் ?

40. திம்மக்கா கால்நடைகளுக்குச் செய்த உதவி யாது ?

[ Turn over

41. விடியற்கால நிகழ்ச்சியாக சுந்தரம் பிள்ளையவர்களின் கற்பனையை விவரி.

42. மோனை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

43. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.

44. ஆனந்தரங்கப் பிள்ளை காலத்தில் நடந்த திருமண வழக்கங்களுள் இரண்டினைக் குறிப்பிடு.

45. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

46. ஆனந்தரங்கப் பிள்ளையின் அன்புள்ளத்தை எடுத்துக்காட்டுக.

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''மணிப்புறாவா ? மாடப்புறாவா ?''

48. ''பசும்புல் தலைகாண்பரிது''

49. ''நான் பாடும் பாட்டைக் கேட்டு இந்த நடுக்காட்டில் மகிழக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள் ?''

50. ''வேறு யாராவது மரங்களை எடுத்துக் கொண்டு போவதற்குள் எங்களுக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும்''

51. ''சூதிற் பணயமென்றே அங்கோர் தொண்டச்சி போவதில்லை''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக : $5 \times 3 = 15$

52. 'பாகவத மேள'த்தில் கோடங்கி எவ்வாறு காட்சி தருவான் ?

*அல்லது*

திம்மக்காவின் தொண்டினை விவரி.

53. அரியணையில் சிறுவனைக் கண்ட பெரியோர் இருவரும் என்ன நினைத்தனர் ?

*அல்லது*

அமெரிக்கர்கள் காலத்தைப் பொன்போல் போற்றும் இயல்பினர் என்பதை எடுத்துக்காட்டுக.

54. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

*அல்லது*

உயிரளபெடை என்றால் என்ன ?

55. ஆகுபெயர் என்றால் என்ன ?

*அல்லது*

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு'' - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியை எடுத்துக்காட்டுக.

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக.

அ) யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்

ஆ) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

இ) புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ?

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ‘‘காதொளிரும் .......... வாழ்க’’

*அல்லது*

‘‘காயக்கண்டது .......... நாடே’’

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. தோல் பொம்மலாட்டம் குறித்து நீ அறிவன யாவை ?

*அல்லது*

சின்னப்பிள்ளையின் சாதனைகளை விவரி.

59. பாரத நாட்டின் சிறப்புகளாக திரு.வி.க. கூறுவன யாவை ?

*அல்லது*

ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் அடைந்த துன்பத்தை விவரி.

60. பூங்குன்றன், இளநாகன் இவர்களின் வழக்கு யாது ?

*அல்லது*

திருக்குறள் பன்னாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது என்பதை விவரி.

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

ஊர்த்திருவிழாக் காலங்களில் சிலம்பாட்டம், கபடி ( சடுகுடு ), வழுக்குமரம் ஏறுதல், உறியடித்தல், மஞ்சள் நீர் ஊற்றுதல் ஆகிய விளையாட்டுகளை இன்றைக்கும் சிற்றூரில் காணலாம். தமிழரின் தற்காப்புக்கலை விளையாட்டுகளில் ஒன்று சிலம்பாட்டம். நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி உயரம் வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டமே சிலம்பாட்டமாகும். உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான கபடிக்கு தனியிடம் கிடைத்துள்ளது. கபடி விளையாடும் போது பாடிக்கொண்டே விளையாடுவது நம் மூதாதையர் வழக்கம்.

*வினாக்கள் :*

1. ஊர்த்திருவிழாக் காலங்களில் காணப்படும் விளையாட்டுகள் யாவை ?
2. சிலம்பாட்டம் என்றால் என்ன ?
3. தமிழரின் வீரவிளையாட்டு எது ?
4. நம் மூதாதையர் வழக்கம் யாது ?

*விடைகள் :*

1.

2.

3.

4.

62. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

i) மழைவளம் பெருக காடுகளை வளர்ப்போம்

ii) கைபேசி பயன்பாட்டில் நன்மை தீமைகள்

iii) என்னைக் கவர்ந்த கவிதையும் புலவனும்.

63. உன் பள்ளியில் நடந்த ஆண்டு விழா நிகழ்ச்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று வரைக. 5

*அல்லது*

நீ வாழும் பகுதியில் உள்ள தெருவில் குவிந்து வரும் குப்பைகளை அகற்றக்கோரி நகரசபை ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.